## திவிநெகும மைக்ரோ நிதி எழுதுகருவிகள் சுழலும் நிதியம் - 2014

திவிநெகும மைக்ரோ நிதி எழுதுகருவிகள் சுழலும் நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும அதிகாரச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.
நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை திவிநெகும மைக்ரோ நிதி எழுதுகருவிகள் சுழலும் நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியம இலக்கம் 01 இன் பிரகாரம் வருமானம் மற்றும் செலவின உருப்படிகள் ஒன்றுக்கொள்று எதிரீடு செய்யப்படாமல் வேறு வேறாகக் காட்டப்படல் வேண்டும். எனினும், மீளாய்வாண்டில் முதிர்ச்சியடைந்த வைப்புக்களுக்காக ரூபா 125,174 மற்றும் முதிர்வடையாத வைப்புக்களுக்காக ரூபா 27,932 ஆக வட்டி வருமானத்தில் குறைக்கப்பட்ட நிறுத்தி வைத்தல் வரியின் கூட்டுத்தொகை ரூபா 153,106 ஆனது செலவின் கீழ் வேறுபடுத்திக் காட்டாது வரி குறைக்கப்பட்ட பின்னரான தேறிய வட்டி வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நியம இலக்கம் 02 இற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் பெறுமதி ரூபா 23,151,414 ஆனதுடன் அது ரூபா 22,693,987 ஆக காட்டப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் தாக்கமளித்திருந்தன.

(i) வழியிடைப் பணம் அடங்கலாக மீளாய்வாண்டில் ஆரம்ப மற்றும் இறுதி காசு மீதிகள் முறையே ரூபா 9,617,742 மற்றும் ரூபா 32,769,156 என்பதுடன் அப்பெறுமதிகள் முறையே ரூபா 11,850,507 மற்றும் ரூபா 34,544,490 ஆக காட்டப்பட்டிருந்தன.

(ii) மீளாய்வாண்டின் பணமாகப் பெறப்பட்ட வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 24,432,793 மற்றும் செலவுகளின் கூட்டுத்தொகை ரூபா 6,266,258 ஆக இருந்தமையால் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு உட்பாய்ச்சல் பெறுமதி ரூபா 18,166,535 என்பதுடன் தேறிய காசு உட்பாய்ச்சல் ரூபா 4,285,574 ஆக காட்டப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் தேறிய காசு உட்பாய்ச்சல் ரூபா 4,984,878 ஆனதுடன் காகிதாகிகள் இருப்பு அதிகரிப்பு ரூபா 4,301,952 ஆனது காசு வெளிப்பாய்ச்சலாக சீராக்கப்பட்டதன் காரணமாக முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு உட்பாய்ச்சல் பெறுமதி ரூபா 682,926 ஆக காட்டப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டின் நிதிச் செயற்பாடுகளின் கீழ் காசுப்பாய்ச்சல் காணப்பட்டதாக அவதானிக்கப்படாமையால் கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் அதிகரிப்பான ரூபா 17,725,487 ஆன காசு உட்பாய்ச்சலாக காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காகிதாகிகள் கொள்வனவு மற்றும் விநியோகம் எந்தவொரு இருப்புப் பதிவேட்டிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் காகிதாகிகள் இருப்பின் பேரேட்டுப் பெறுமதி ரூபா 20,305,951 என்பதுடன் பௌதீக இருப்பு மீதியானது ரூபா 20,837,578 ஆகும். இவ் விருப்பு மீதிகள் இரண்டிற்குமான வேறுபாடு ரூபா 531,627 ஆனது நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானமாகக் கருதப்பட்டிருந்தது.

(ஆ) வங்கிச் சங்கங்களுக்கு விற்கப்பட்ட காகிதாகிகளுக்காக வருட இறுதியில் பெற வேண்டிய தொகை ரூபா 10,333,675 சம்பந்தமாக வசூலிக்கப்படாத இலாபம் கணக்கிடப்பட்டதுடன் வசூலிக்கப்படாத இலாபம் ரூபா 939,425 அதிகமாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. மேலும், அம்முறையின் படி வருட ஆரம்பத்தில் வசூலிக்கப்படாத இலாபம் ரூபா 554,578 அதிகமாகச் சீராக்கப்பட்டதன் காரணமாக காகிதாகிகள் விற்பனைக்கான இலாபம் ரூபா 384,847 குறைவாக நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் மறுக்கப்பட்ட காசோலைகளின் பெறுமதி ரூபா 80,500 ஆனது கடன்பட்டோர் கணக்கிற்கு சீராக்குவதற்குப் பதிலாக காகிதாகிகளின் கிரயப் பெறுமதி ரூபா 73,182 ஆனது காகிதாகிகள் இருப்புக் கணக்கிலும் இலாபம் ரூபா 7,318 ஆனது காகிதாகி விற்பனை இலாபத்திலும் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய வருடத்தில் நிதிக் கூற்றுக்களில் ரூபா 119,962 ஆன அலுவலக உபகரணம் பூரணமாகப் பெறுமானத்தேய்விடப்பட்டமை காரணமாக பூச்சியப் பெறுமதியில் காட்டப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டில் அவ்வுபகரணங்கள் மீள்பெறுமதியிட்டுக் கணக்குகளில் உள்ளடக்கப்படுவதற்கு அல்லது சட்டபூர்வமாக நீக்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாது நிதிக்கூற்றுக்களில் நீக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச மக்கள் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 763. | அலுவலகர்களை வழிநடாத்துதல் மற்றும் கழிவுகளைக் குறைப்பதன் மூலம் இருப்புக் கட்டுப்பாட்டை செயற்திறன் மிக்கதாகப் பேணுவதற்கான களஞ்சியசாலை விதிகள் முறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 இன் அரசப் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.12 ஆம் வழிகாட்டி | பெறுமதி சேர்க்கப்பட்ட வரியானது செலுத்தப்பட்ட பின்னர் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையுடன் மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த வட் வரியின் பெறுமதி ரூபா 533,088 ஆகும். |

| | |
|---|---|
| (இ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.3 (ஆ) பந்தி | நிதியம் பேணப்பட்டு வரும் போது பிரமாணம் அறிமுகப்படுத்துவதற்கு மற்றும் நிதியம் சட்ட ரீதியாக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 2.4 பெறவேண்டிய கணக்கு

இலங்கை சலுசலா நிறுவகத்திற்கு உரித்தான களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த காகிதாகிகள் இருப்பு 2010 ஆம் ஆண்டில் நீக்கப்பட்டிருந்ததுடன் ஆனால், அதற்காக செலவிடப்பட்ட களஞ்சிய சாலைக்கான வாடகை வைப்பு ரூபா 1,454,112 ஆனது மீண்டும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவு ரூபா 4,285,574 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,499,143 ஆனதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 786,431 ஆன முன்னேற்றமொன்று காட்டப்பட்டிருந்தது. இம்முன்னேற்றத்திற்கு செலவுகள் எதுவும் செய்யப்படாமையே பிரதானமான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவச் செயற்பாடுகள்

நிதியத்தின் தொழிற்பாடுகளுக்காக முழுநேரத்திற்காக நியமிக்கப்பட்ட பதவியணியினரின் சம்பளம், களஞ்சிய சாலை பேணப்படுவதற்கான செலவுகள் மற்றும் ஏனைய பொதுவான தொழிற்பாட்டுச் செலவுகள் அரசினால் செய்யப்படுவதுடன் அச்செலவுகளை அரசிற்கு மீள் நிரப்புவதற்கான முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 2 மாதத்திற்குள் திறைசேரியின் அரச நிதித் திணைக்களத்திற்குப் பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக் கூற்றுக்கள் 2017 பெப்ரவரி 22 ஆந் திகதி சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டும் குறைபாடுகள் காரணமாக திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 04 ஆந் திகதியே மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தாமதமான காலம் 4 வருடங்களுக்கு மேற்பட்டதாகும்.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் நிதியத்தின் நடவடிக்கை சம்பந்தமாக திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------------------------

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் நிதியத்தின் 4.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்தின் அலுவல்கள் சம்பந்தமாக வரவு செலவுத் திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

----------------------------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பாக காலத்திற்குக் காலம் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், உள்ளகக் கட்டுப்பாடு முறைமைகளை நிறுவிப் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணிச் செல்வதற்கான விசேட கவனம் கோரப்படுகின்றது.